[பேரவைத் தலைவர்]

நான் கண்டிருக்கிறேன். அவர்கள் இரண்டரை ஆண்டுக் காலமாக பொறுப்பேற்றுக் கொண்டு அதனை ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதி மக்களுக்கு, கோடிக் கணக்கான மக்களுக்கு நன்மைகள் செய்கின்ற பணியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட தலைசிறந்த அந்தத் தலைவருக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் "டாக்டர்" என்ற பட்டம் வழங்கியிருக்கிறது.

கடந்த தேர்தலிலே தமிழ்நாட்டு மக்கள் பெரிய நம்பிக்கை வைத்து அவர்களுடைய இதய ஒலி, அபிலாஷைகள் ஆகியவற்றின் சின்னமாகவும் வெற்றியுடன் அவர்கள் வெளிவந்தார்கள். இன்றைக்கு ஒரு பெரிய சமதர்ம சமுதாயம் அமைக்கின்ற காரியத்திற்கும் பொருளாதாரப் புரட்சிக்கும் சமூகப் புரட்சிக்கும் தன்னை ஒரு கருவியாக ஏற்றுச் செயல்படுகின்ற அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் இன்னும் வளருகின்ற வகையில் நல்வாழ்த்துக்களை பேரவையின் எல்லாப் பகுதியிலும் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சார்பிலேயும் தெரிவித்துக்கொண்டு அவர்கள் பல ஆண்டுக்காலம் நீடுழி வாழ இன்னும் நல்ல ஆற்றல்களையும் பல வெற்றிகளையும் பெற்று இந்த நாட்டு மக்களை முன்னேற்ற வேண்டுமென்ற முறையிலே என்னுடைய இதயங்கனிந்த பாராட்டுதல்களையும் தெரிவித்து மன்றத்தின் உறுப்பினர்களின் சார்பிலே தெரிவித்துக்கொள்கின்ற முறையிலே அவர்கள் கரவொலிசெய்து ஆமோதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (கரவொலிகள்).

(3) அறிவிப்புகள்

(அ) கவன ஈர்ப்புகாரியம் ஒற்றிவைக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் திரு. கு. காமாட்சி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு பொதுமுக்கியமான காரியமொன்றைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அது ஒற்றிவைக்கப்படுகிறது.

(4) கவன ஈர்ப்பு

தென்னை, வாழை மரங்கள் தொத்து நோய்களால் பாதிக்கப் பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. ஏ. எம். இராஜா அவர்கள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொதுமுக்கியமான காரியத்தைக் கொண்டுவருவார்கள்.